





We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## ஜூலை - 2019

We Are Here..!! To Guide You..!!






# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## ஜுலை - 25.07.2019

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- சர்வதேச நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- நியமனங்கள்










## சர்வதேச நிகழ்வுகள்

- **மத்திய வர்த்தக மற்றும் கைத்தொழில் மற்றும் ரயில்வே அமைச்சர் பியூஷ் கோயல் 2019 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய கண்டுபிடிப்பு குறியீட்டின் (GII) 12 வது பதிப்பை புதுதில்லியில் வெளியிட்டார்.**
    - 2019 GII இன் கருப்பொருள் "ஆரோக்கியமான வாழ்வை உருவாக்குதல் - மருத்துவ கண்டுபிடிப்புகளின் எதிர்காலம்" ("Creating Healthy Lives – The Future of Medical Innovation") அரசாங்க கொள்கைகள் மற்றும் தொழில் நடைமுறைகளில் புதுமைகளை இந்த குறியீடு கண்காணிக்கிறது.
    - 2018 ஆம் ஆண்டில் 57 வது இடத்திலிருந்து 100 இல் 36.58 மதிப்பெண்களுடன் இருந்த இந்தியா 2019 ஆம் ஆண்டில் 52 வது இடத்தில் உள்ளது.

## தேசிய நிகழ்வுகள்

- பெரு நகரங்களில் மெட்ரோ இரயில் இருப்பதைப் போல, சிறுநகரங்களில் குறைவான பெட்டிகள் கொண்ட இலகுரக 'மெட்ரோலைட்' இரயிலை இயக்கலாம் என மத்திய அரசு பரிந்துரைத்துள்ளது. **'மெட்ரோலைட்' இரயில் மூன்று பெட்டிகள் கொண்டதாக இருக்கும். அதிகபட்சமாக மணிக்கு 60 கி.மீ, வேகத்திலும், குறைந்தபட்சமாக 25 கி.மீ வேகத்திலும் இந்த இரயிலை இயக்கலாம்.**

- **திரிபுராவில் மின் உற்பத்தி மற்றும் விநியோகத்தை மேம்படுத்துவதற்கான திட்டத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) 1925 கோடி ரூபாய் வழங்கியுள்ளது.** 699 கோடி ரூபாய்க்கு மேல் மதிப்பிடப்பட்ட செலவில் 63 மெகாவாட் ரோக்கியா திட்டத்தின் (Rokhia Project) திறனை 120 மெகாவாட்டாக உயர்த்தவும், கிட்டத்தட்ட 1225 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கும்தி ஹைட்ரோ எலக்ட்ரிக் திட்டத்தை (Gumti Hydro Electric Project)

நவீனப்படுத்தவும் இந்த திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

- **இந்திய ஆயுதப்படைகள் நாட்டின் முதல் உருவகப்படுத்தப்பட்ட விண்வெளி போர் பயிற்சியான “இண்டஸ்பேஸ்எக்ஸ்” “IndSpaceEx”** நடத்த தயாராக உள்ளன. பாதுகாப்பு அமைச்சகத்தால் மூன்று படைகளும் இணைந்து இப்பயிற்சியை நடத்தவுள்ளது குறிப்பிடத்தக்கது.

- **மத்திய கலாச்சார மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரஹ்லாத் சிங் படேல்** (Prahlad Singh Patel) நாடு முழுவதும் உள்ள **தொல்பொருள் அருங்காட்சியகத்தை டிஜிட்டல் மயமாக்குவதற்காக ஒரு சிறப்பு மென்பொருளான ‘ஜடான்’ – ஐ** (JATAN), அறிமுகப்படுத்தினார். இதனை உருவாக்கியவது, மனித மையங்கள் வடிவமைப்பு மற்றும் கணினி குழு C- DAC, புனே, மகாராஷ்டிரா

## அறிவியல் & தொழில்நுட்பம்

- **விண்வெளித் துறையில் பணிபுரியும் பன்னாட்டு துளிர்நிறுவனங்களை ஈர்ப்பதற்கும் விண்வெளி தொடர்பான தொழில்நுட்பம் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான முதன்மை மையமாக அதை உருவாக்குவதற்குமாக திருவனந்தபுரத்தில் அதிநவீன விண்வெளி அமைப்புகள் பூங்காவை அமைக்க கேரள மாநில அரசு முடிவு செய்துள்ளது.** இது இந்தியாவின் முதல் விண்வெளிப் பூங்காவாக இருக்கும் என அம்மாநில அரச தெரிவித்துள்ளது.
    - DR.APJ அப்துல் கலாம் மையம் மற்றும் விண்வெளி அருங்காட்சியகம் ஆகியவற்றை விண்வெளிப் பூங்காவின் ஒரு பகுதியாக மாற்றவும், அதனை அமைப்பதற்குத் தேவையான நிலங்களை ஒதுக்கவும் மாநில அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இதற்கான முழு நிதியுதவியையும் விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் (VSSC) வழங்கும்.

- **இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு (ISRO) தனது முதல் சூரிய பயணமான ஆதித்யா – L 1 ஐ 2020 முதல் பாதியில் தொடங்கப்போவதாக அறிவித்துள்ளது.**
    - சூரியனின் கொரோனாவைப் படிப்பதற்கான முதல் அர்ப்பணிப்பு அறிவியல் பணி இதுவாகும்.

## நியமனம்

- **புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட போரிஸ் ஜான்சன் அமைச்சரவையில் பிரித்தி படேல் பிரிட்டனின் உள்துறை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.** அவர் பிரிட்டனின் முதல் இந்திய வம்சாவளி உள்துறை செயலாளர் இவர் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது.

We Shine Academy™